DUPLICATE

பதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்

விரோதிஞு (1889)
ஆவணிமீ ௨௨
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	ஆ 1-க்கு	ரூ. 2-80
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 4-70
தொடுவாய்ப்பகுதி:	,,	ரூ. 4-70
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5 00
,,	காற்கலம்	ரூ. 3 15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஞு ஆனிமீ ௧௪௳, ௧௯௨௩-ம்ஆ ஜூன்மீ ௨௮௳. இலக்கம்—௫௧.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

சர்ஸமிஸ்ரி லேகியம்.

இந்தலேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெருமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாருஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, குமான்தசர, பிஸ்தா, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசிந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்த காமாலை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல். வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறுத்தலுக்கு ரூபா ௧0. கால்றுத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாபிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
ஆரப்பத்தை,
காத்தான்குடி போஸ்து,
(M. 1.) மட்டக்களப்பு.

முருங்கைப்பூ லேகியம்.

இது பலத்தையும் ஆண் தன்மையையும் அதிபாவியத்தில் பலம் இழந்து தவிப்போரின் ஆயுளையும் மானத்தையும் காத்துப் போஷிக்கும் நிகரற்ற லேகியம். தாதுவிருத்தியும், இரத்தக் கட்டும் பலமும் கொடுப்பதில் இதற்கிணை கிடையாது.

விலை ரூ. 2-8-0.

இஞ்சி லேகியம்

இந்தலேகியம் கண்டபடி சுக்காய்ப் பிரமாணம் காலை மாலை 40 நாள் உட்கொள்ள நெஞ்செரிவு, வாய்க்கசப்பு ஆரோசியம், வாய்நீர் ஊறல் புளியேப்பம், அகாலபசி, பசியின்மை, வாந்தி, அஜீரணம், வயிற்றுரட்டம், பித்தக்கிறாணி, பித்தவாய்வு, மயக்கம் முதலிய வியாதிகளை கண்டிக்கும்.

விலை ரூ. 1-8-0.

டி. என். சதாசிவம்பிள்ளை,
மானேஜர்,
சரவணபவாநுகூல வைத்தியசாலை,
Y. 12. தஞ்சாவூர்.

பேசெல்மிஷன் கலிக்கற் ஒடுகள்.

கலிக்கற்றிலுள்ள பேசெல்மிஷன் தொழிற்சாலையிலே செய்யப்படும் இவ்வோடுகள் பெலன், செப்பம், நிலைக்குந்தன்மை இவைகளில் ஒப்பில்லாதவாய் மற்றெல்லா ஓடுகளிலும் விசேஷமானவென்று இத்தேசத்திலும் பிறதேசத்திலுமுள்ள நிபுணர் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. சற்தேசப்படுவோர் சென்ற 25 வருடங்களாக மேன்மையாய் மதிக்கப்பட்டுவரும் இவ்வோடுகளால் வேயப்பட்டிருக்கும் ஏராளமான கட்டடங்களைப் பார்க்கவும்.

ஓடு வாங்குஞ் சிநேகிதரே, வாங்குவதற்கு முன் நீங்களே ஓடுகளைச் சோதனைசெய்து பார்த்து உங்களைத் திருத்திசெய்துகொள்ளுங்கள்.

உவில்லியம்மேதர் அன் சன்ஸ்,
தனி ஏசன்றர்,
(H. 13.) (Sole Agents)

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கும் மன்மத கோலாகலக் குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெக்கும் புகழ் பெற்றது. தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையிற்பரீக்ஷிக்கலாம். நல்லஜீரணம், ரத்தவிர்த்தி, தாதுபுஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, இடுப்புவலி நீங்கும். உத்தரவாதம். 100 குளிகைக்கு ரூபா 10. 48 குளிகைக்கு ரூ. 5. 24 குளிகைக்கு ரூ. 3. மாதிரிக்கு 16 குளிகை ரூ 2.

மாந்திரீக சத்து.

மஹானருளால் உலகெங்கும் கியாதிபெற்ற இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தனலாபம், தொழிலபிவிருத்தி, காரியசித்தி, புத்திரசந்தானம், தெய்வ துணை உண்டாகும். செய்வினை, பேய்பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6சத்துகள் ரூ, 10. வி. பி. சார்ஜ் வேறு.

C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல்ஹால்,
Q. 37. பழனி, S. I.

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

தாதுப் புஷ்டியை உண்டாக்குவதில் இது ஒப்பற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தாது கட்டும், தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும், மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், கேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
(Q. 40) வைத்தியசாலை, பழனி. S. I

இலங்கையிலிருந்து ஒருவிளம்பரம்.

அற்புதமான ஔஷதம்.

ஆயுர் வேத
ரதிவல்லப மோதக.

விலை 30-க்கு ரூபா 2 சதம் 50
அல்லது
ஆச்சரியம்! ரூபா 2 அணு 8. ஆச்சரியம்!

ஒருவேளை மருந்தில் குணந்தெரியும். இந்த மருந்தானது சகலவித மேகச்சூடு, பித்தச்சூடு, முதலான உஷ்ணங்களைச் சுகமாக்கித் தாதுபுஷ்டி, சரீரபுஷ்டி, முகவசீகரம், தேககாந்தி, மூளைக்குப் பலங்கொடுப்பதுடன் நரம்புத்தளர்ச்சி, அக்கினிமந்தம், மலச்சிக்கல், பசியின்மை முதலான வியாதிகளைச் சுகமாக்கும் தேவாமிர்தமாகும்.

ஆயுர்வேத தைலம்.

ஆச்சரியமான மருந்து

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய மருந்து.

இதை ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்.

விலை சொற்பம்! குணம் அதிகம்!

இந்தமருந்தை வெளியேதேகத்தில் பூசுவதினுல் குணமாகும் வியாதிகள்:

(1) தலைவலி, கபாலஇடி, பிடரிவலி, ஜலதோஷம், நெஞ்சுவலி, மார்படைப்பு, இருமல், சுக்கிருமல், ஒருத்தலைவலி, வாந்தி முதலிய வியாதிகளும்;

(2) வாய்வுவலிகள், நரம்புவலிகள், பிடிப்புகள், சுளுக்குவலிகள், கை கால் குளிர்ச்சி, கெண்டை இழுத்தல், வயிற்றுவலி, வாந்திபேதி, காலங்களிலுண்டாகிற சகலவியாதிகளும்;

(3) வாய்வு, இடுப்புவலி, முழங்கால்வலி, கணுக்கால்வலி, கைவலிகள், உளைச்சல்கள், வாதம் 80 வகைகளும்;

(4) பல்வலி, பல்லரணை, கன்னவீக்கம், கட்டிகள், புறப்பாடுகள், மொழிவீக்கம், ரத்தக்கட்டு, சதைபிரட்டல் முதலியவைகளும்;

(5) தேள்கடி, பூரான்கடி, எலிக்கடி, விஷக்கடிகள், சிறு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் உண்டாகிற இன்னும் அனேக வியாதிகள்; இந்த மருந்தை நோயுள்ள பாகங்களிற் பூசி னதும் சுகமாகும். விலை சீசா 1-க்கு ரூபா 1—0—0.

☞ பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிறதேச வாசர்கள் மருந்தின் கிரயமும் தபால்சார்ஜ ரூபா 1 அணு 8 அல்லது ரூபா 1 சதம் 50 சேர்த்து முற்பணமாயனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுங் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா.

N. B. ஆடர் எழுதும் நண்பர்கள் தமது விலாசம் இங்கிலீஷில் கூட்டெழுத்து இல்லாமல் எழுதவேண்டும். இதை கவனிக்கவும்.

இனும்! இனும்!! இனும்!!!

ஆடர் அனுப்புகிறவர்களுக்குப் பெரிய கேட்லாக்கும் 1923-ம் வருடக் கலண்டரும் இனுமாகப் பார்சலுடன் அனுப்பப்படும்.

மேல்விலாசம்:—
A. டாக்டர். எம். சந்திரசேகரம்,
ஆயுர்வேத வைத்தியசாலை,
Y. 13. H. குருநாகல், சிலோன்.

Telegrams: "APPANNA", BANGALORE CITY

கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,

பெங்களூர் நகர்,
(இந்தியா).

பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

	ரூ.அ.பை.
பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை	0-12-0
முதல் ரூபா 2-0-0 வரை.	
புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
முதல் ரூபா 4-0-0 வரை.	
மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
முதல் ரூபா 3-0-0 வரை.	
ஜவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	5-0-0
முதல் ரூபா 7-0-0 வரை.	
கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	5-0-0
முதல் ரூபா 12-0-0 வரை.	
அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா	1-8-0
முதல் ரூபா 20-0-0 வரை.	
வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரூ.	0-4-0
முதல் ரூபா 5-0-0 வரை.	
புனுகு தோலா 1க்கு விலை ரூபா	10-0-0
முதல் ரூபா 12-0-0 வரை.	
தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா	2-0-0
முதல் ரூபா 3-0-0 வரை.	

கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர்ஆயில்புட்டி 1க்கு 0-12 0.
டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0.
டஜன் 1க்கு 8-0-0.

ஓட்டோ வாஸலீன் ஸெண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City
(Y. 16.) (INDIA).

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

தாதுபுஷ்டிக்குகைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

தாதுபுஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷிக்க ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 38.) வைத்தியசாலை, பழனி. S. I.

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:-ருதிரோற்காரிஞு ஆனிமீ 14உ

"நட்டாலுநண்பல்லார்நண்பல்லர்."

மாட்சிமை தங்கிய தேசாதிபதியவர்கள் சில தினங்கட்கு முன் யாழ்ப்பாணம்வந்த சமையத்திற் செய்த உபந்நியாசங்களிரண்டின் மொழிபெயர்ப்பையும் சங்கிரகமாக, சென்ற வார இந்து சாதனப் பிரசாரத்தில் வெளியிட்டிருந்தோம். அவ்வுபந்நியாசங்களைச் சித்தசமாதானத்துடன் நோக்குவார்க்குத் தேசாதிபதியவர்கள் தமிழ் மக்களைக் குறித்து நல்லெண்ணமுடையவராயிருக்கின்றாரென்பதும் அவர் கூறியவை மனப்பூர்வமாகச் சொல்லப்பட்டனவன்றி உள்ளொன்று வைத்துப்புறம்பொன்றாகப் பேசப்பட்டன அல்லவென்பதும் ஒருவாறு புலப்படுமென எண்ணுகின்றேம். வடமாகாணத்திலே தேசாதிபதியவர்கள் கமத் தொழில் விருத்திக்கான முயற்சிகளைச் செய்துவருகின்றார் செய்வதாக வாக்களித்திருக்கின்றார். தமிழர்கட்காகப் பிரத்தியேகமாக மேன்மாகாணத்தில்வைக்கப்பட்டுள்ள பிரதிநிதி ஸ்தானம் நியாயமானதென்றும் அதன்பொருட்டு வாதாடுவது தமிழர்களின்'பிறப்புரிமையாகுமென்றும் கூறியிருக்கின்றார். மேன்மாகாணத்திற் பலசர்மார்த்தமாகத் தமிழர்கள் மிகுந்திருப்பதே அவர்களுக்கு ஒரு பிரத்தியேக ஸ்தானம் ஆங்கு ஆவசியகம் வேண்டுமென்பதற்குக் காரணமென்றுஞ் சொல்லியிருக்கின்றார். தமிழர்கள் தங்களுக்குரிய சுதந்திரங்களைப் பெறும் விஷயத்தில் வாதாடுவதன்றி மௌனஞ் சாதித்தால் அவற்றைச் சிற்சில சமையங்களில் இழந்துவிடவேண்டி நேரிடுமெனவுந் தெரிவித்திருக்கின்றார். தமிழ்மக்களாற் றெரிவு செய்து சட்டநிரூபணசபைக்கு அனுப்பப்படும் பிரதிநிதிகள் நியாயமான விஷயங்களில் அரசினரோடு ஒத்துழைக்கச் சித்தமுள்ளவராகவிருத்தல் வேண்டுமென்றுஞ் சொல்லியிருக்கின்றார். ஒரு சாதியார் தமக்கு அநுகூலமாகவும் தம்மோடு ஒத்த இன்னொரு சாதியாருக்குப் பிரதிகூலமாகவு முள்ள ஒரு விஷயத்தைத் தமக்கு முறையிடுவரேல் அதனைத் தாம் ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லையெனவுங் கூறியிருக்கின்றார். ஈற்றில் இந்த விஷயங்களைத் தாமிங்கே (யாழ்ப்பாணத்திலே)மாத்திரமன்று எவ்விடத்திலேயாயினும் சொல்வதற்கு ஆயத்தமாகவிருப்பதாகவுங் கூறியிருக்கின்றார்.

இவைகளை யெல்லாம் நன்கு சிந்திக்குங்கால், தேசாதிபதியவர்கள் தமது உபந்நியாச ஆரம்பத்திற் சொன்னபடி சொல்லவேண்டியவைகளை வெளிப்படையாகச் சொல்லிவிட்டனரென்பதும், கொழும்பு ஸ்தானம் தமிழர்களின் பிறப்புரிமையென்பதும், கொழும்பு ஸ்தானம் தமிழர்கட்கு அநுகூலமாகவும் சிங்களர்கட்குப் பிரதிகூலமாகவு மிருப்பின் தமிழர்கட்கு அது கொடுபட்டிரா தென்பதும், அந்த ஸ்தானத்தைக் கொடுக்கவேண்டாமெனச் சிங்களர் சொல்வது சிங்களருக்கு அநுகூலமாகவும், தமிழர்கட்கு அவர்களுடைய பிறப்புரிமையைத் தவிர்ப்பதற்கு ஏதுவாகவிருத்தலினால் அது பிரதிகூலமாகவுமிருக்குமென்பதுபற்றியே சிங்களர் தடையைப் பொருட்படுத்தாது கொடுக்கப்பட்டதென்பதும் பெறப்படுகின்றன.

இனி, தமிழர்கட்கு மேன்மாகாணத்தில் உதவப்படவிருக்கும் சட்ட நிரூபணசபை ஸ்தானத்தைப் பற்றிய விஷயம் சென்ற வருடம் சட்ட நிரூபண சபைக் கூட்டமொன்றில் எடுத்தாளப்பட்டபோது இரு தமிழ்ப் பிரதிநிதிகளும் அந்நிர்ணயத்தில் அரசினருக்குச் சார்பாய் நிற்கத் தவறினமையினாலேயே தமிழர்களாயுள்ளவர்கள் நியாயமான விஷயங்களில் அரசினருடன் ஒத்துழைத்தல் வேண்டுமெனத் தேசாதிபதியவர்கள் கூற ஏற்பட்டது. அவ்விஷயத்தில் அக்காலத்தில் தமிழ் மாகாணப் பிரதிநிதிகளிருவரில் எவரேனும் தங்களைச் சட்டசபைக்குத் தெரிந்தனுப்பிய சனங்களின் அபிப்பிராயத்தை யறிந்து அதன்படி செய்துகொள்ள எண்ணினாரல்லர்.

மேலும், தேசாதிபதியவர்கள் தாம் தமிழர்கள் வசிக்கும் நாடாகிய யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அவர்கட்கு உவப்பான விஷயங்களை, அவர்களைப் பிரியப்படுத்தும்படி தாம் சொல்லிவிட்டு, சிங்களர் வசிக்கும் மாகாணங்களில் அச் சிங்களருக்கு விருப்பான விஷயங்களைக் கூறி இங்கே சொன்ன விஷயங்களை மறைத்துவிடக்கூடுமென்று தமிழர்கள் ஒருபோது சந்தேகங் கொள்ளக்கூடுமென் றெண்ணியே "இந்த விஷயத்தைத் தான் இங்குமாத்திரமன்று மற்றெந்தஇடத்திலுஞ் சொல்ல ஆயத்தமாக விருக்கிறேன்" என்று கூறினர். இந்த நியாயங்களால் தேசாதிபதியவர்கள் சொல்லியவை மனப்பூர்வமானவை யென்பது இனிது பெறக் கிடக்கின்றது.

இங்ஙனமிருப்பவும், இங்குள்ள சிங்கள பத்திரிகைகள் தேசாதிபதி கூறியவை சிங்களருக்கும் தமிழருக்குமிடையே ஒற்றுமையீனத்தை உண்டாக்கி அவர்களைப் பிரித்தல்வேண்டுமென்னும் நோக்கம் பற்றிச் சொல்லப்பட்டனவென்று தேசாதிபதிமீது தோஷங் கற்பித்து, தமிழர்களை எச்சரிக்கின்றனர். ஆங்கிலர் இவர்களைப் பிரித்தாளவேண்டிய நியாயமென்ன! சிங்களரும் தமிழரும் ஐக்கியமாக விருந்தால் இவ்விருசாதியாரையும் அடக்கியாளுவது ஆங்கிலரால் முடியாதென்பது இவர்கள் கருத்துப்போலும். அது வீண் எண்ணம். ஆளப்பிறந்தது தாங்கள் ஆளப்படப்பிறந்தது நாங்களென்பதை அவ்வாங்கிலர் நன்கறிவார்கள். இதனாலே இருசாதியாரும் ஐக்கியப்பட்டிருப்பதால் யாதும் நன்மையில்லையென நாஞ் சொல்லவரவில்லை; ஆனால் ஐக்கியப்படுவதனால் அரசினருக்கு இவர்கள் செய்யக்கூடிய வசதியீனங்களெவையுமில்லையென்பதே இங்கே சொல்லத்தக்கது.

அன்றியும் ஐக்கியப்படவேண்டுமென்ற விஷயம் இருசாதியாருக்குமிடையே பரஸ்பரம் இருந்தாலன்றோ ஐக்கியம் பிறக்கும். சிங்களருக்குத் தமிழர்களுடன் ஐக்கியப்படுதல் பிரியமில்லாமலிருக்க, தமிழர் யாதும் சுதந்திரங்களைப் பெறுவது பிரியமில்லாமலிருக்க, தமிழர்மாத்திரம் உளுத்துத்தனமாகச் சிங்களருடன் ஐக்கியப்படமுயன்றால் அது வாய்க்குமா. இப்பொழுது புறப்பட்டிருக்கும் புதிய தமிழபிமானிகளைக்காட்டிலும், ஸேர் இராமநாதனவர்கள்; ஸேர் அருணசலமவர்கள் இச்சிங்களருடன் நீடித்தகாலமாக நன்கு ஊடாடி இவர்களுக்கு இடருற்ற இடத்திற் பேருதவிகளுஞ் செய்துள்ளவர்கள். அநுபவத்தாலும் அறிவாலும் வயசாலும் மேம்பட்ட அவர்களே சிங்களர் அலட்சியத்தைக் கண்டு அவர்களுடன் மாறுபடவேண்டியவராயினர். "நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்" என்ற பிரகாரம் ஐக்கியப்படவேண்டுமென்ற எண்ணமில்லாதாருடன் ஐக்கியப்படுதல் அசாத்தியம். தமிழர்கட்கு மேன்மாகாணத்தில் ஒரு பிரதிநிதிஸ்தானம் வரப்போகின்றதென்று, ஊர்விட்டுத் தேசம்விட்டு தம் முயற்சிவிட்டுக் கடல்கடந்து இங்கிலாந்திற்குச் சென்று, அந்த ஸ்தானத்தை அவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டாமென்று வாதாடுஞ் சிங்களர் எப்போதாயினும் தமிழருடன் ஐக்கியப்படுவரென நாம் காத்திருப்பதெப்படி? இதுமாத்திரமா, தேசாதிபதி யாழ்ப்பாணம் வந்த சமையத்திலே தமிழர்கட்குச் சாதகமாகச் சில கூறிவிட்டாரென்று கொழும்பிலிருந்து வெளிவருஞ் சிங்களப் பத்திரிகைகள் தேசாதிபதியைத் திட்டத் தொடங்கிவிட்டனவே. தேசாதிபதியை மாத்திரமா! தமிழர்கட்குக் கிடைக்கும் எச்சிற்கும் ஒரெல்லையுண்டா! உண்மையாகத் தமிழர்களுடன் ஐக்கியப்பட்டு ஒத்துழைக்கவேண்டுமென்னும் நோக்கம் இச்சிங்களருக் கிருக்குமாயின், தமிழர்கட்குச் சில விசேஷ உரிமைகள் கிடைத்தாலும் அவற்றின்பொருட்டு இச் சிங்களர் மகிழ்ச்சியடைவதை விட்டு இப்படி ஆத்திரப்படுவாரா!

சிலதினங்கட்குமுன்னர், இங்கிருந்து வெளிவரும் "இலங்காபிமானி' (Ceylon Patriot) என்னும் பத்திரிகை சிங்கள தமிழரின் ஐக்கியத்தைவிரும்பி அச்சிங்களருக்குச் சாதகமாக ஒரு வியாசத்தை வெளியிட்டது. அவ்வியாசத்தைக் கண்ட சிங்கள ஆங்கில தினவர்த்தமானியாகிய (Daily Mail) என்னும் பத்திரிகை கூறியவற்றுட் சில வாக்கியங்களை மாத்திரம் இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றேம்,

> "தமிழர்கள் தாங்கள்பெறவேண்டிய சலாக்கியங்களையெல்லாம் காத்திருந்ததிலும் பார்க்க அதிகமாக இலங்கை மந்திரியிடம் பெற்றுக்கொண்டு இப்பொழுது சிங்களவருடன் சமாதானஞ்செய்துகொள்ளலாமென்று நினைக்கின்றார்கள். ஆனால் இந்தச்சமாதானம் செய்துகொள்ளலாமென்னும் எண்ணம் ஒருபோதும் நடக்கப்போவதில்லை. சிங்களவரைச் சமாதானத்துக்கு வரும்படி தமிழர்இப்பொழுது கேட்பது எதுபோல இருக்குமென்றால் சிலந்தி தன் வலைநடுவில் இருந்துகொண்டு புறத்தேயிருக்கும் ஈயைத்தன்னிடம் வரும்படி அழைத்தலைப்போலஇருக்கும். இனி அரசாங்கத்தாரின் நிலையைப்பார்ப்போம்; தமிழர்கட்குக் கொடுக்கவேண்டிய சலாக்கியங்கள் எல்லாவற்றையும் அரசினர் கொடுத்துவிட்டார்கள். தேசாதிபதியவர்களே யாழ்ப்பாணத்திற்குச் சென்று அத்தமிழர்களைப் புகழ்ந்து உங்களுடைய பிறப்புரிமை உங்களுக்கு நிச்சயமாகக்கிடைக்குமென்று தாமாகவே வாக்குப்பண்ணி, நீங்கள் நீதியெனக் கண்ட விஷயத்தில் அரசினரோடு ஒத்துழைத்தல்வேண்டுமெனக் கேட்டார். அதற்குத்தமிழர்செய்தபிரதியுபகாரமென்ன.(The Suspicious Tamils are even suspicious of the Government which has given them their birthright) எவரிடத்தும் சந்தேகங்கொள்ளும் இயல்புடைய தமிழர்கள் தங்கள் பிறப்புரிமையைக் கொடுத்த அரசாங்கத்திலும் சந்தேக முறுகின்றார்கள்.

இங்ஙனமாக ஒரு பத்திரிகை தேசாதிபதியின் வார்த்தையைநம்பவேண்டாம் அவர் பிரித்தாளும் நோக்கமாகத்தான் இந்த ஆசைவார்த்தைகளைச் சொன்னார். அவர் தமிழரிற் காட்டும் அபிமானம் போலி அபிமானமாயிருக்கும். அவர் மீண்டு கொழும்பிற்குப் போனபோது தமிழர்களை ஏமாற்றிவிட்டேனென்று தனக்குள் சிரித்துக்கொண்டு போயிருப்பார் என்று இந்த விதமாக அவரைக் குறைகூறிச் சனங்களை எச்சரிக்கத் தலைப்பட்டது. இலங்காபிமானியும் இதற்கு ஆமாச் சொன்னது; இப்பொழுது தமிழர்கட்கு இவ்வபிமானிகள் சிங்களரிடத்தில் "சந்தேகப்படுமியல்புடைய தமிழர்" "நன்றியற்ற தமிழர்" என ஏச்சுவாங்கிக் கொடுத்தனவேயன்றிச் சிங்கள தமிழரின் ஒற்றுமையை ஆக்கிவிட்டனவா?

"நாடிநமரென்று நன்குபுறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழ்தல்—ஒளிர்மணி
நீடுகல் வெற்பநினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்."

என்ற ஆன்றோர் வாக்கின் பிரகாரம் ஒருவர் தாமாக எமக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் நோக்கங்கொண்டு எம்மிடம் வர, யாம் அவர்மீது சந்தேகித்துப் பிறரோடு சேர்ந்து அவரைக் குறை சொல்லுதல், நுனிக்கொம்பிலிருந்து அதன் அடிப்பக்கத்தைத் தறிக்க முயல்வதுபோல எமக்கே கேடாக முடியும். அதிசயம் (அரியதாம்) திருடிய நாய்க்கு அங்கு போனாலும் அடி, இங்கு போனாலும் இடி என்ற பிரகாரம் தாங்கள் கொண்டிருக்குஞ் சந்தேகங் காரணமாகச் சிங்களராலும் தமிழர்களாலும் அரசினராலும் வெறுக்கப்படுவர். இவர்கள் எத்துணை இதவார்த்தை பேசியபோதும் சிங்களர் இவர்களுடன் ஐக்கியப்படப்போவதில்லை. ஏனென்றால் "நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்".

இன்னுமொரு விஷயம் சிந்திக்கத்தக்கது. தமிழருக்குத் தேசாதிபதி காட்டிய நன்றியிற் பத்திலொருபங்கை அவர் சிங்களருக்குக் காட்டுவரேல் அவர்கள் அவரைச் சிரசின்மேற் றாக்கிவைத்துப் புகழுவர்; தமிழரைக்காணவில்லையென்று சொல்லும்படியாக நசித்துவிட முயல்வர். தமிழர்கள், சிங்களருடன் ஐக்கியப்படுதற்குத் தங்களால் ஆனமட்டும் முயன்றும் பலியாமைகண்டே அவர்களை விடுத்துத் தமக்கு வேண்டிய சுதந்திரங்களைப் பெற முயன்றனர். தாங்கள் விசேஷ சகாயங்களைப் பெற்றுவிட்டோமென்று மற்றைய சாதியாரை நகைக்குமியல்பு தமிழர்களாகிய எங்களிடத்தில்ஒருபோதும் இல்லையாகும்.

"சொற்சோர்வுபடேல்."

கொக்குவிற் சோதிடபரிபாலன மட பஞ்சாங்க கணிதர்களாகிய ஸ்ரீ. ச. இ. சிவராமலிங்கையரும் ஸ்ரீ. ச. பஞ்சாக்ஷர ஐயரும் "யஜுர்வேத உபாகரும நிச்சயம்" என்னும் விஷயமாக ஒரு பத்திரம் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அப் பத்திரத்தில் எம்மைக் குறித்தும் சில வரைந்துள்ளனர். அவை வருமாறு:—

> "சென்ற 48-ம் இலக்க இந்துசாதனப் பத்திரிகையில் ஒருவர் 'உபாகர்ம வினா' என்னும் மகுடநாமத்தின் கீழ் 'ஓர் யசுர்வேதி' எனக் கைச்சாத்திட்டு, இவ்வருஷத்தில் ஆடிமாதத்திலா அல்லது ஆவணிமாதத்திலா யசுர் உபாகர்மங் கொள்ளப்படவேண்டியது என வினாவியிருந்தார். ஷ பத்திரிகையில் இவ்வினா நிகழ்த்தப்பட்டது எமக்குத் தெரியவரத் தாமதித்ததனால் அடுத்த இலக்கத்தில் நாம் விடையளிக்கச் சாத்தியமாகாதுபோயது. இதற்கிடையில் 49-ம் இலக்கப் பத்திரிகையில் 'கடிதர்க்கு விஞ்ஞாபனம்' என்னும் மகுடநாமத்தின்கீழ் ஷ பத்திராசிரியர் 'உபாகர்ம வினாவிற்குவிடை' என்னும் மகுடநாமத்துடன்ஓர்சாமவேதிஎனக் கைச்சாத்திட்டு ஒரு கணிதர் அனுப்பிய கடிதம்......' எனவும், 'பஞ்சாங்க கணிதர்களென்றிருப்பவர்களிடத்திற் சந்தேகத்தை நீக்கிக்கொள்ளும் பொருட்டு யாதும் வினவினால் அவர்கள் ஆத்திரப்படவேண்டிய காரணம் யாதோ அறியோம்' எனவும், ஏதேதோ எழுதியிருக்கிறார், 'அவ்விஞ்ஞாபனத்தில் "கணிதர்" "பஞ்சாங்க கணிதர்" எனப்பத்திராசிரியர் சுட்டியது எங்களைத்தானோ? எனச் சிலர் எம்மை வினவினர்; அவ்வித மகுடநாமத்துடன் ஒருகடிதம் எழுதாதும் சாமவேதி யெனக் கைச்சாத்திடாதும் பத்திராசிரியருக்கு அனுப்பாதுமிருக்கவும் ஷ பத்திராசிரியர் அவர்கள் பொது சனங்களை மயங்கவைத்தகாரணம் யாதோ அறிகிலேம். இவ்விதமாகச் சனங்களைமயங்க வைத்தெழுதியிருப்பதற்குக் காரணங்காட்டல் பத்திராசிரியர்மேற் பொறுத்த கடனாகும்."

கணிதர்களிருவரும் குறித்த கடிதத்தைப்பற்றி யாதொன்று மறியாதிருப்ப, பிறர் தங்கள்மேற் சந்தேகமுறும்வண்ணம் யாம் "கடிதர்க்கு விஞ்ஞாபனம்" எழுதிவிட்டேமென எம்மைக் குறை கூறுகின்றனர். நாம் நடந்த செய்தியைக் கூறுகின்றேம். அறிஞர்கள் உண்மையை உள்ளபடி உணர்ந்துகொள்வாராக. குறித்த துண்டுப்பத்திரத்திற் கைச்சாத்திட்ட இருவருள் ஒருவராகிய ஸ்ரீ. ச. பஞ்சாக்ஷர ஐயரென்பவர் இற்றைக்கு இரண்டுவாரங்கட்கு முன்னர் ஒரு தினம், யாம் இந்துக் கல்லூரியில் எமது கடமையைச் செய்துகொண்டிருக்கும்போது நேரில் எமது கையில் ஒரு கடிதத்தைத் தர யாம் "சுவாமீ, இது என்ன கடிதம்" என்று கேட்க, உங்கள் பத்திரிகையில் வெளிவந்த உபாகர்ம வினாவிற்கு விடையென்றும், இதனை அடுத்த பத்திரிகையில் தவறாது வெளியிடவேண்டுமென்றும் கூறித்தந்தார். இந்த ஐயர் கடிதத்தைத் தந்தபோது ஏறக்குறைய இருபத்தைந்து முப்பது மாணவர்களும் இன்னொரு உபாத்தியாயரும் சமுகமாயிருந்தனர். கடிதத்தைத் தந்த அந்தச் சமையத்தில் அதனை விரித்துப் படிக்க எமக்குச் சாவகாசமின்மையினால், அதனை வைத்துவிட்டு எமது கல்லூரிக் கடமையை முடித்துக்கொண்டு இந்துசாதன ஆபீசுக்குச் சென்றபின் கடிதத்தைப் படித்துப்பார்த்தபோது, அது வினாவிற்கு விடையாகாது தூஷணையும் குதர்க்க வினாவும் பொருந்திய கடிதமாகவிருப்பக் கண்டு, யாம் அதனைப் பத்திரிகையில் வெளியிடாது கடிதர்க்கு விஞ்ஞாபனமென ௪௯-ம் இலக்கப்பத்திரிகையில் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டிருந்தேம். அதனை அபிமானிகள் அப்பத்திரிகையிற் கண்டுகொள்ளலாகும். பரீக்ஷாகாலம் சமீபித்திருந்தமையினால் இந்த ஜூன் மீ 16உ சனிக்கிழமை இந்துக் கல்லூரியில் யாம் ஒரு விசேட வகுப்பு வைத்துப் படிப்பித்துக்கொண்டிருக்கும்போது காலை 10மணி வரையில் இந்தப் பஞ்சாக்ஷர ஐயரும், இரகுநாதையரவர்கள் தத்தபுத்திரராகிய ஸ்ரீ. சிவராமலிங்கையர் பெற்ற புத்திரர் இரகுநாதையரும் அங்கு எம்மிடம் வந்து, எம்மைக் கண்டு "நீர் எங்கள் கடிதம் கடுமையானதாகவிருந்தாற் பத்திரிகையிற் போடாது விடலாம். அப்படிச்செய்யாது உமது விஞ்ஞாபனத்தில் அதனைக் கண்டித்தெழுதியது சரியல்ல"வென்றும், "இப்பொழுது எங்கள் கடித்தத்தைத் திருப்பித்தந்தால் நாங்கள் துண்டுப்பத்திரமாயாயினும் வெளியிடுவோம்; அதனைத் தரல்வேண்டும்" என்றுங் கேட்டனர். சனிக்கிழமைகளில் எங்கள் பத்திரிகை ஆபீஸ் திறக்கப்படுவதில்லாமையினால், அன்று அக்கடிதத்தை எடுத்து அவர்களிடம் திருப்பிக் கொடுத்தல் முடியாதாக, அவர்களை அடுத்தநாள் வரும்படி சொன்னேம். அவர்களுள் எவராயினும் வந்திலர். பின்னர் ஒருதினம் இந்துசாதன ஆங்கில பத்திராசிரியரை நாம் கண்டபோது அவர் இப்பஞ்சாங்ககணிதர்கள் தம்மிடம் வந்து தாங்கள் கொடுத்த கடிதத்தை யாம் வெளியிட மறுத்துவிட்டமையைக் குறித்தும், கடிதர்க்கு விஞ்ஞாபன மெழுதியதைக்குறித்தும் குறைசொன்னார்களென எமக்குத் தெரிவித்தார். அப்பொழுது யாம் அக்கடிதத்தைப் பத்திரிகையில் வெளியிடாமைக்குக் காரணத்தைக் கூறி அக்கடிதத்தையும் பார்க்கும்படி ஆங்கில பத்திராசிரியரிடம் கொடுத்தேம். இதுவே ஐயருக்கும் நமக்குமிடையே இக்கடித விஷயமாக நடந்தசெய்தியாம். கடிதத்தைப் பத்திரிகையில் வெளியிடாமையின் காரணத்தைக் கடிதர்க்கு விஞ்ஞாபனத்திலும், இற்றைப் பிரசாரத்திலுள்ள உலகம்பலவிதத்திலும்வெளியிட்டுள்ளேம். இங்ஙனமெல்லாமிருப்ப, ஐயர் தமது பெயருடன் வெளிவந்த துண்டுப்பத்திரத்தில் "அவ்வித மகுடநாமத்துடன் ஒரு கடிதம் எழுதாதும் சாமவேதியெனக் கைச்சாத்திடாதும் பத்திராசிரியருக்கு அனுப்பாதுமிருக்க(வும்) ஷ பத்திராசிரியரவர்கள் பொதுசனங்களை மயங்கவைத்த காரணம் யாதோ அறிகிலேம்" என்று கூறி, "பத்தா பூலோகமா" என்றவன் நிலையில் நிற்கின்றார். ஒரு கடிதமெழுதாதிருப்பவும் என்று ஐயர் கூறுவதை யாமும் ஒத்துக்கொள்ளுகின்றேம்; ஏனென்றால் அப்படிப்பட்ட ஒரு கடிதத்தைத்தானும் வரைவதற்கு ஐயருக்கு ஆற்றலுண்டோ என்பது சந்தேகம். பத்திராசிரியருக்கு அனுப்பாதிருக்க(வும்) என்றுகூறுகின்றார். அதுவும் ஐயர் சொல்வது சரி; ஏனெனில் ஐயர் எம்மிடத்தில் தாமே நேரிற் கொண்டுவந்து தந்தவரன்றி அனுப்பியவரல்லர். இனி, கைச்சாத்திடாத விஷயத்தைப்பற்றிச் சொல்லுகில், ஐயர் கடிதத்தை நேரிற் கொண்டுவந்து

தக்தமையினால், யாம் அவருடைய கை யெழுத்தை வேண்டியிருக்கவில்லை. வேதம் வரும் வாயிலிருந்து இப்படிப்பட்ட மாறுபாடான வார்த்தை பிறக்குமென்பதை யாம் எதிர்பார்த்திருக்கவில்லை. இப்பொழுதும் இப் பஞ்சாக்ஷர ஐயர் குறித்த கடிதத்தைத் தாம் சேர்த்துக் கொண்டுவந்து எம்மிடந் தரவில்லையென எம்முன் சொல்லவோ என்பது ஆட்சேபம். பூசுரரென்றும் பஞ்சாங்க கணிதர்களென்றும் உலகப் பிரசித்தமாக விருப்பவர்கள் சொற் சோர்வுபடல் முறையன்று.

உலகம் பலவிதம்.

“உபாகர்ம வினாவுக்கு விடையும் இந்துசாதன பத்திராசிரியரின் விஞ்ஞாபனத்துக்கோர் தடையும்” என மகுட நாமம் புனைந்து “ஸாமவேதி” என்று கைச்சாத்திட்டு யாழ்ப்பாணம் கொக்குவிற் சோதிடப் பிரகாச யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்ட ஒரு பத்திரம் பார்த்துள்ளோம். இச்சாமவேதி தாம் அனுப்பிய தூஷணைபொதிந்த குதர்க்கம் நிறைந்துள்ள உபாகர்ம வினாவுக்கு விடை என்னும் கடிதத்தை யாம் இவ்விந்துசாதனத்தில் வெளியிட மறுத்தமையை யிட்டுத் தமது பத்திரத்தில் எம்மைப் பெரிதுங் கண்டிக்கின்றார்; அதுவுமன்றித் தமது பத்திரத்தில், இப்பத்திரிகையில் வெளியிடும்படி தாம் உதவிய விடையோடு சிலவற்றைப் பின்னர்ச் சேர்த்தும் வெளியிட்டிருக்கின்றார். ஸாமவேதி யென்பதனால் இவர் ஓர் பிராமணோத்தமரென்பது அறியக் கிடக்கின்றது. இவ்வந்தணசிகாமணி எம்மீது நிகழ்த்தும் ஆட்சேபங்களை ஒவ்வொன்றாக எடுத்துக்காட்டி அவற்றிற்குச் சமாதானமுஞ் சொல்லுகின்றோம்.

* * *

“உபாகர்மம் என்ற சொல்லைத்தானும் பிழையறப் பார்த்தெழுதத் தெரியாத நீர் தானா நம் விடையைத் தடை செய்ய வல்லவர்” என்கிறார் ஸாமவேதி. உபாகர்மம் என்ற சொல் எங்ஙனம் பிழையாகப் பார்த்து எழுதப்பட்டிருக்கின்ற தென்பதை அவர் எடுத்துக் காட்டினாரில்லை. அச்சொல் எங்கேனும் அச்சுப்பிழையாக “உபகர்மம்” என்று வெளியிட்டிருக்கலாம். அதனைக்காரணமாகக்கொண்டு ஸாமவேதியர் எமக்கு மௌட்டிகம் கற்பிப்பது முறையன்று. அது அச்சுப்பிழையன்று, பார்த்தெழுதத் தெரியாமையினாலேயே யெழுந்த பிழை யென்பரேல், ஸாமவேதியர் தமது பத்திரத்தில் பன்முறை உபாகர்மம் என்று எழுதி அப்பத்திரத்தின் நான்காம்பக்கத்தில் “இவ்வருஷம் ஆவணி மாதத்திலேயே யசுர்உபகர்மங் கொள்ளத் தக்கது” என்ற இறுதிவாக்கியத்தில் ‘உபகர்ம’ மெனப் பாராமலெழுதி யிருக்கின்றார். அது அச்சுப்பிழையாயின் இதுவும் அச்சுப்பிழையாம். இல்லையேல் இல்லையாம்.

* * *

ஐயா சாமவேதியரே இன்னுமொன்று இயம்புவேங் கேளும்: நீர் எழுதிய அக்கண்டன பத்திரத்தில் “பின்னை, விடைகளை, இடம் பெறுதென, ஒளித்து விடலாம்..., முடியாததாயுள்ளவெல்லாம், கண்டிக்காததும் நுழையாததும் வன்மையில்லாததும் பயவாததும் நடப்பதும் போன்றதுமான கடிதங்களுக்கு, யியாழ்ப்பாணம்” என ஒருமை பன்மையின் பேதமுணராமலும், ழகர ளகர பேதமறியாமலும், வழூஉச்சொற் புணர்த்தியும் நீர் நமதுபத்திரத்தில் எழுதிய பிழைகளை எல்லாம் பொறுக்கும் பெரியோர், அபுத்திபூர்வமாக நேர்ந்த உபகர்மம் என்ற ஒரு பிழையை மாத்திரம் பொருட்படுத்தப் போகின்றார்களா?

* * *

“நாமனுப்பிய விடையில் தூஷணை பொதிந்திருக்கின்றதென்றீரே, அதில் எந்தச் சொல் எந்தப் பகுதி தூஷணையானது” என்று ஸாமவேதி கடாவுகின்றார்; சொல்லுதும்: ஸாமவேதியே, உமது விடைக் கடிதத்தில் யசுர்வேதியை விளித்து “உமக்கு இன்னும் வேதங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லைப்போலும்.” “இவ்வருஷம் வரும் உபாகர்மமே உமக்குப் பிரதமோபாகருமமா யிருக்கவேண்டும்” “நீர் அக்காலம் சிறுபிள்ளையாயிருந்திருக்கலாம்” என்று வரைகடந்து சொல்லத் தலைப்பட்டுக்கொண்டீர். மேலும் “நமது பாட்டன் முப்பாட்டன் காலத்துச் சுவடிகளோயா” என்று வியர்த்தமாக நீர் உளறுகின்றீர். இதுவுமன்றி நீர் வேறு பத்திராசிரியர்களிடஞ் சென்று உமது நிந்தனை மலிந்த கடிதத்தைப் பத்திரிகையில் வெளியிடும்படி அவர்களை இரந்தபோது அவர்களும் அதுதம் பத்திரிகையில் இடம்பெறுதென மறுத்தமையினாலும் உமது கடிதம் பத்திரிகையில் இடம்பெறுதென்பது உமக்கு நன்கு புலப்படுமே? இன்னும், திருக்கணித பஞ்சாங்கத்தைக் காரணமின்றிக் கண்டிக்கின்றீர். உமது கடிதத்தைக் குதர்க்கமெனத் தள்ளிவிட்டோமென்கிறீர். அவ்விஷயத்தில் உமக்குச் சந்தேகம் நிகழக் காரணம் என்னையோ? எட்டுணையாயினுந் தர்க்க மறிந்தார்க்கே தர்க்கத்திற்கும் குதர்க்கத்திற்கு மிடையேயுள்ள பேதத்தை யெடுத்துக் காட்டுதலாகும். அப் பேதத்தை உமக்கு விளக்குவது அசாத்தியம். தர்க்க முணர்ந்தார் அறியும் வண்ணம் உமது குதர்க்க வினாக்களை உமது பத்திரத்திற் கண்டவாறே இங்குத் தருகின்றோம். “நீர் அறிவின் மேம்பட்டதனால் உம்மை இந்துசாதனத்துக்குப் பத்திராசிரியராக நியமித்தனரோ? அன்றேல் நீர் இந்து சாதனத்துக்குப் பத்திராசிரியரா யிருத்தலினால் அறிவு முதிர்ச்சி யுடையராயினீரோ? உமக்காக இந்துசாதனம் தாபிக்கப் பெற்றதோ? அல்லது இந்துசாதனத்துக்காக நீர் நியமிக்கப்பட்டீரோ? நீர் எத்தனை பத்திரிகைகளுக்கு ஆசிரியராயிருந்தீர்? இந்து சாதனம் எத்தனை பத்திராசிரியரைக் கண்டிருக்கிறது? உம்மை விட்டால் இந்து சாதனத்துக்குப் பத்திராசிரியர் கிடையாது போய்விடுமோ? இந்து சாதனம் நடைபெறாது விடுமோ?” இவைகள்தாம் சுவாமிகள் எம்மீது கடாவிய வினாக்கள். அறிஞர்காள், சுவாமிகளுடைய வினாக்களில் யாண்டாயினுந் தர்க்கரீதியுமுண்டோ வென்பதைச் சிறிதுசிந்தித்துப் பாருங்கள்.

* * *

ஸாமவேதி, “யசுர்வேதியர்பால் நாமாவது பஞ்சாங்க (க)ணிதர்களாவது ஆத்திரங்கொள்ளாதிருக்கவும்........” என்கிறார். ஸாமவேதியின் ஆத்திரத்தை அவர் வெளியிட்டிருக்குங் கடிதமே காட்டும். பஞ்சாங்க கணிதர்மீது கொண்ட அழுக்காறு காரணமாக யாம் அக்கடிதத்தைப் போடாதொழித்தோம் என்கிறார் ஸாமவேதி. சென்ற வருடம் நிகழ்ந்த சூரிய கிரகண காலம் இச்சோதிட மட வாக்கிய பஞ்சாங்கத்திற் கண்டபடி நிகழ்ந்தமையினால் அவர்கள் கொண்டது சரியென இவ்விந்து சாதனத்திலேயே வெளியிட்டிருந்தோம். ஆதலினால் யாம் அழுக்காறு காரணமாக யாதுஞ் செய்யவில்லை யென்பது இனிது புலனாகும். இனி அவர்கள்பால் யாம் அழுக்காறுறுதற்கான விசேஷமேதும் இருப்பின் அன்றோ அழுக்காறுற்றேமெனலாம். இவ்விஷயத்தில் அவர்கள் அறியாமையைக் குறித்து யாம் அனுதாபமுறுவதன்றி அவர்கள் மீது அழுக்காறுறுவ தெங்ஙனம் பொருந்தும்?

* * *

ஸாமவேதியரே, “நீர் பெண்களுக்கே யுரிய அச்சம் என்னுங் குணத்தை மேற்கொண்டிருப்பது” என்று அச்சம் பெண்களுக்கு மாத்திரமே யுரியது ஆடவர்க்கு இல்லை யெனச் சாதிக்க முயல்கின்றீர். அறிவுடையார் தகாதன செய்ய அஞ்சுவர். நீர் கொண்ட அச்சமின்மை கூழைவால்மா? அஞ்சற்கஞ்சாது என்பது போன்ற அச்சமின்மை யென அறிந்து கொள்ளுதிர். நீர் வெள்ளாடு கனைகின்ற தென வேங்கைப்புலி விம்மி விம்மி யழுதவாறு நமது இந்து சாதனத்திற்காகப் பெரிதும் அனுதாபங் கொள்ளுகின்றீர்! இந்து சாதனத்தி னருமையைச் சோதிடமட வாக்கிய பஞ்சாங்க கணிதர் பாற்கேட்டறிந்து கொள்ளும். “பேனா நுனியைத் தீட்டித்தீட்டிக்கொண்டும்” என்றீர். வேதியரே, எழுதுவதற்குத் தீட்டப்படவேண்டியது எழுத்தாணியன்றிப் பேனா யன்றென்பதை இனியேனு மறிந்துகொள்ளுதிர். சிலேஷார்த்தமாக வாக்கியமெழுதவேண்டின், மேலும் மேலுங் கற்றுப் பின்மதிகொண்டு எழுதத் துணிவீரேல் ஒருபோது வாய்க்கும்.

* * *

ஸாமவேதியர் எம்மை நோக்கி, உமது ஒவ்வொரு விஷயமும் ஒருகோடி பொன் பெறுமாமே, அப்படியாயின் நீர் பிரசுரிக்கும் விஷயங்களின் கணக்கைப் பார்த்தால் இப்புண்ணாடு வறுமை நீங்கிப் பொன்னாடும் வந்து தங்காடுவெனப் போற்றும் போக நன்னாடாமென வெங்காளும் வைகுடு(க்)கானிலத்தே என்னுங் கருத்தமைய, ஆனந்தமே வீட்டினாற் றம்பாட்டிலே பாடத் தலைப்பட்டுவிட்டனர். ஐயா, ஸாமவேதியரே, இந்த இடத்திலேயே உம்முடைய குதர்க்க முனைப்புப் பிரத்தியக்கமாக வெளிப்படுகின்றது. எங்ஙனமெனிற் சொல்லுதுங் கேளும். கண்டபடி உளறும் ஒருவனை அறிவுடையோர் பார்த்து இவன் கர்த்தபத்தை நிகர்ப்பன் என்று சொன்னால், அவனுக்கு நாலு காலும் ஒரு வாலும் பொதி சுமக்குமியல்பும் உண்டென்பது அர்த்தமன்று. அவனுடைய உளறுபடை, கர்த்தபத்தின் உபேட்சிக்கத் தக்க கத்துதலை ஒத்திருத்தலைப்பற்றியே அவன் கர்த்தபத்தை நிகர்ப்பனெனப்படும். அங்ஙனமன்றிக் கர்த்தபத்தை நிகர்ப்பன் என்று சொன்ன மாத்திரத்தே வண்ணான் அவனைக்கழுதை யென வெண்ணிப் பொதி சுமக்கும்படி பிடித்துச் செல்ல முயலுதல் சாலாது. அஃதேபோல் விஷயத்தின் அருமைநோக்கி [illegible]கோடி பொன் பெறுமென்று சொன்ன[illegible]யன்றி உண்மையாக அந்த விஷயம் கே[illegible] பொன் கொடுத்து வாங்கப்படுவ தெ[illegible]பது கருத்தன்று. ஆன்றோரும் “ம[illegible]யாதார் முற்றம் மதித்தொருகாற் செ[illegible]று மிதியாமை கோடிபெறும்” எனப் பி[illegible]யாகித்திருந்ததலைக் கண்டுகொள்ளும். இ[illegible]னாலே யாழ்ப்பாணம் விட்டு வறுமை யொழிந்து விடுமென நீர் நம்பியிருந்து பின்னர் ஏம்பலியாதீர்.

* * *

நீர் சொல்லுகிறபடி எமது பத்திரிகையில் தொனியற்ற உருவற்ற மணமற்ற ருசியற்ற சுகமற்ற முறுமுறுத்த கடிதங்களுக்கு இடங் கிடைக்குமேல், நிச்சயமாக உமது பிழையுற்ற பயனற்ற கடிதமும் இப்பத்திரிகையி லிடம்பெற்றிருக்குமன்றோ. நீரும் அண்டைப்பத்திர மடித்து இடர்ப்படவேண்டி வாராதே! சுவாமி, நீர் அந்தணரென்னும் முறைமைபற்றி ஈற்றில் மனப்பூர்வமாக எம்மை ஆசீர்வதித்ததன் பொருட்டு யாம் பெரிதும் நன்றிபாராட்டுகின்றோம். உலகம் பலவிதமாதலால் உம்மை நோவதாற் பயனில்லையன்றோ!

சமாசாரம்.

கதிர்காமயாத்திரை:—சென்றவாரப்பிரசுரத்தில் வெளிவந்த கதிர்காமயாத்திரை என்னும் விளம்பரத்தில் இலங்கைப்புகைரத ஸ்தானங்களிலிருந்து கதிர்காம யாத்திரைக்காக மாத்தளைக்குச் செல்பவர்கட்கு என்று பிழையாக விருப்பதை மாத்துறைக்குச் செல்பவர்கட்கு என்று திருத்திக்கொள்க.

புகைரதவிபத்தில் அகப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு:—சென்றமார்ச்சு 24வ-தம்புக்கணைக்கும் கடுகணுவைக்குமிடையே நேர்ந்த புகைரத விபத்தில் அகப்பட்டுமாண்டவர்களுடைய உரிமைக்காரருக்கும் அவ்விபத்தில் காயமடைந்தவர்களுக்கும் ஏதும் பொருளுதவி செய்தற்கு அரசினர் நிச்சயித்திருக்கின்றனர். திரவியசகாயம் பெறவிரும்புவோர் கொழும்பு அரசாங்க உதவித்தனாதிகாரிக்கு (Assistant Colonial Treasurer, General Treasury Colombo) விண்ணப்பஞ் செய்தல்வேண்டுமாம்.

திருநெல்வேலிச் சைவவித்தியாசாலையின் ப[illegible]னிப்புக் கொண்டாட்டம்:-சென்றஆனிமீ 2[illegible] (16—6—23) சனிக்கிழமை இரவு 7 மணி [illegible] வித்தியாசாலையின் 5 வருடப் பரிசளிப்புக் கொண்டாட்டம் கௌரவ வை. துரைச்சாமி அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அந்தருணம் சில[illegible] பிரசங்கங்கள் கூறப்பட்டன பின்னர், ஆண்பிள்ளைகளால் ஓர் அபிநயச்சம்பாஷணையும் பெண்பிள்ளைகளாற் சில சம்பாஷணைகளும் நடாத்தப்பெற்றன. இடையிடையே மாணவராற் சங்கீதங்கள் பாடப்பெற்றன. அறிக்கைப்பத்திரத்தில் ஓர் வாசிகசாலை வேண்டுமென வாசிக்கப்பட்டதால், வாசிகசாலையின் அருமை பெருமையைச் சபையோரிற் சிலர் கூறியபின்னர் வாசிகசாலைஸ்தாபிக்கத் தீர்மானஞ் செய்யப்பட்டது. இத்துவாமியர்சங்கஅங்கத்தவர்களாலும், இவ்வூர்த் தேசாபிமானப் பிரபுக்களாலும், தொகைவாய்க்கொடுக்கும் இவ்வூர்ப்பிரபுக்களாலும் இவ்வித்தியாசாலை உயர்தரநிலைபெற்று வருகின்றது. வித்தியாசாலை உயர்தரநிலைபெற்று வரும்விசேடத்தையும் இன்னும் உயர்தரநிலைபெறற்குத் தேசாபிமானிகள் செய்யவேண்டிய முயற்சிகளையும்சபாநாயகரவர்கள்கூறினர் பின்னர் அரசினர் சோதனையிற் சித்திபெற்றோர், சமயபாடம், தையல், வித்தியாசாலைக்கு ஒழுங்காகவரல்என்பவைகளில் முதற்றரமானோர்க்கும் வகுப்பில்முதற்றரமானோர்க்கும்பரிசுகள் அளிக்கப்பட்டன. பின்னர் 9½ மணியளவில் கொண்டாட்டம் முடிவுற்றது. வித்தியாசாலை உயர்தரநிலைபெற ஈசனருள்புரிவாராக.

இலங்கைத் தீக்குச்சுகள்:—சென்ற சனிக்கிழமை மாலை இவ்விடத்திலுள்ள இலங்கை ‘தீவப்படி’ தீக்குச்சுக் கம்பேனிப்பங்காளிகள் பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. அதன் நடவடிக்கைகளிலிருந்து இத்தீக்குச்சுக்கம்பேனி மிகவும் சித்தியுடன் நடத்தப்பட்டுவருவதாய் அறிகின்றோம். ஐந்துவருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட இந்தக்கம்பேனி, வருடந்தோறும் வண்ணமாய் வளர்ந்து இப்போது அதன் பங்காளிகளுக்கு நூற்றுக்குநாற்பது வீதம் லாபம் பகிர்ந்துக்கொடுக்கக்கூடிய செழிப்பான நிலைமையை அடைந்திருக்கிறது. இந்தக்கம்பேனியார் செய்யும் தீக்குச்சு ஸ்வீடன் ஆஸ்திரியா முதலிய அயல்நாடுகளிலிருந்துவரும் தீக்குச்சுக்கு ஒவ்வொரு அம்சத்திலும்சமானமாயிருக்கிறது. ஜப்பான தீக்குச்சுகளைப்போல போலி வேலைப்பாடுள்ளதல்ல ஆனால், சரியான விளம்பரம் இல்லாமையாலும் சுதேசப்பொருட்களை வாங்கவேண்டுமென்னும் உணர்ச்சிசனங்களுக்குள் இன்னும்பரவாமையினாலும், அயல்நாட்டுத் தீக்குச்சுதான் எங்கும் விசேஷமாய்க் காணப்படுகின்றது. இலங்கை தீக்குச்சுக்கம்பேனியார் தங்கள்தொழிலை விருத்திசெய்து அன்னியநாட்டுத் தீக்குச்சுகள் இலங்கைக்குள் வாராதபடிசெய்வார்களென்று எதிர்பார்த்திருக்கிறோம். அதுவுமன்றி, இலங்கைமக்கள் எல்லோரும் இலங்கைத்தீக்குச்சுகளையே உபயோகிக்கவேண்டுமென்று ஜனங்களுக்குள் பிரசார வேலையும் செய்யவேண்டும். தேசநேசன்.

விவாகம்:

நிகழும் ஆனிமீ 15வ- வெள்ளிக்கிழமைகாலை 10 மணியளவாயிலவருகிற சுபமுகூர்த்தத்தில் பெருமாள்கோவிலடி பிரமஸ்ரீ ச. கிருஷ்ணசாமிசர்மாவுக்கும் மானிப்பாய் பிரமஸ்ரீ அப்பாத்துரை ஐயரவர்கள்புத்திரி ஸ்ரீமதி அன்னபூரணியம்மாளுக்கும் விவாகம் நடைபெறும்,.

கடிதம்.

இந்துசாதன பத்திராசிரியர்க்கு:

ஐயா,

“தேசாபிமானி”யில் வைகாசி மீ 30-ந் திகதிப் பிரசுரத்தில் யாழ்ப்பாண நகரபரிபாலன சங்கத்தில் நடந்த நடபடிக்கைகளைப்பற்றி அப்பத்திரிகைநிருபர் வெளியிட்டிருப்பதைக் காணுந்தோறும் அந்நிருபரதும் அந்நிருபத்தைப் பத்திரிகையில் பிரசுரிக்க உடன்பட்ட ஏனையோரினதும் மனத்தகத்தே குடிகொண்டிருக்கும் அழுக்காறு “உள்ளங்கை நெல்லிக்கனி”போல் தெள்ளிதிற் காணக் கிடக்கின்றதல்லவா?

நம்முன்னோர் முன்னேறுதற்கா இப்போது கற்பிக்கப்படவேண்டிய நல்விஷயங்கள் கணக்கிலவாயிருக்கவும் அவைகளையெல்லாம் ஒரு பொருட்படுத்தாது தங்கயன்கருதிப் பிறர்மீது அற்பகாரியங்கட்கெல்லாம் தூஷணையையே பெருமழைபோற் பொழிவதைத்தான் “தேசாபிமானி” தன்கருமமாய்க் கொண்டிருக்கிறது போலும். ... ...

... ... இழிந்த செயல்களையும் பேச்சுகளையும் இயன்ற அளவுக்கு விலக்கவேண்டியது தர்மமாயிருக்கப் பணத்தைக் கொடுத்துப் பிணத்தை வாங்குவது போன்று குற்றமுள்ள செயல்களுக்கு உடன்படுதல் புத்தியீனமன்றோ?

இற்றைக்குச் சிலதினங்கட்குமுன் கொழும்புத் தமிழருக்கு அரசாங்கத்தாராற் கொடுக்கப்பட்ட பிரத்தியேகமான சட்டநிரூபணசபை அங்கத்துவத்தை முற்றாய் அழிப்பதற்குக் கங்கணங்கட்டிநின்ற சிங்களச் சாதியார், இங்கிலாந்தில்வேண்டிய பிரயத்தனங்கள் செய்வதை அறிந்த நம்மவர் எம் உரிமையைப் பாதுகாப்பதன்பொருட்டு எதிர்க்கட்சியாரின் பிரயத்தனங்கட்கு மாறாக அரசாங்கத்தாருக்கு மனுப்பத்திரம் ஒன்றை அனுப்பியிருந்தார்கள் என்பதை யாவரும் நன்கறிந்திருப்பார்கள். இப்பத்திரத்தைப்பற்றி “தேசாபிமானி”ப் பத்திராதிபர் ... ... எம் தலைவர் சேர் பொன்னம்பலம் அருணாசலமவர்கள்மீது தம்மால் இயன்றவரையும் கண்டனக்கணை வரைந்துவிட்டுப் பின்வருமாறு கூறுகின்றார்:—

“அவுணப்படை தாக்கின்று எதிர்த்தலாற் பயன் யாது? நமது பொன்கிளார்ச் சங்கத்தார் இன்சொல்லினாலன்றி வன்சொல்லினால் உலகம் மகிழாது என்னும் உண்மையைப் புத்தகத்திலாவது அனுபவத்திலாவது அறியவில்லை. ஆத்திரமும் விரோதபாவமும் சொட்டச் சொட்டத் தூஷணை மலிந்த இவ்விண்ணப்பத்தை ஒழித்து அன்பும் நியாயமும் தேசாபிமானமும் கசிந்து கசிந்து பிழியும் ஓர்விண்ணப்பம்எழுதியிருக்கலாகாதா?”

என்று இவ்வாறு எழுதியிருந்தார். ஆ! இவ்வாறெல்லாம் சேர். பொன்னம்பலம் அருணாசலம் முதலிய நீதியுடைய பெருமக்களுக்கும் புத்தி புகட்டிய “தேசாபிமானி” மேற்கூறிய உண்மைப் போதனைப்படி கனம் சபாபதியவர்கள் விஷயத்தில் ஒழுக்கத்தவறியதற்கு நியாயமென்னோ? இது ஓர் பெருவியப்பே! போதனை ஒன்றாயிருக்கச் சாதனை அதற்கு மறுதலையாகின்றதே!! பத்திராசிரியர்க்கு இது அழகல்லவே! நடுவுநிலைமை, காருண்ணியம், உண்மையுரைத்தல் ஆதிய நற்குணங்களன்றோ என்றும் புகழ்பெற்ற உண்மைப் பத்திராசிரியர்க்கு நல்லாபரணம்? இதைவிடுத்துப் பத்திரிகையில் இடமுள்ளவரை அநுவசியமாகப் பிறர்மீது கண்டனங்கள் வரைவதுதானா பத்திராசிரியர்க்கு லக்ஷணம்!

நகர பரிபாலன சங்கத்தில் அங்கத்தவர் பேசியதைப்பற்றித் “தேசாபிமானி” கூறியவிடத்தில் “றெயில் என்சின்போல் மூசினார்” “கடகம் கடகமாகக் கொட்டினார்” “முனியப்பசாமியாரை, வயிரவராரை யென்றார்” “முழங்காலில் நின்று குழறினார்” என்று எழுதியிருந்தவைகளை நோக்குந்தோறும் அந்நிருபத்தை வரைந்தவருக்கு. இவ்வசம்பாவிதமான வீண் மொழிகளேயொழிய வேறு நற்சொற்கள் மனதில் உதித்தில வென்பது பெறப்படுகின்றது.

“உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—”

மேலும்மேலும் இவைகளைப்பற்றி எழுதுவதால் யாது பிரயோசனமுமில்லை. ஆயினும்,

“ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்,
தீதுண்டோ மன்னு முயிர்க்கு.”

என்னும் பொய்யாமொழியாரின் வாக்கைத் “தேசாபிமானி மறவாதிருக்கவேண்டும்.

“இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.”

கொழும்பு, கா. இ.
21—6—23.

[இக்கடிதத்திற் சிலவாக்கியங்கள் விரும்பத்தகாத கண்டனமானமையாற் றவிர்க்கப்பட்டன. —பத்திராசிரியர்]

ஸ்ரீசட்டநாதகோவில் என வழங்கும்
ஸ்ரீநல்லைநாதசுவாமி சிவாலயத்தின்
திருநந்தனவனத்து
சுற்றுமதிற்றிருப்பணிவிஞ்ஞாபனம்

புண்ணியசீலர்காள்!

ஸ்ரீநல்லைநாதசுவாமியின் நித்திய நைமித்திகங்கட்குப் பூக்கொய்தற்பொருட்டு இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் புதிதாயமைத்த நந்தனவனத்துச் சுற்றுத் திருமதிலின் எஞ்சிய பாகத்தையும் கட்டி நிறைவேற்றுதற்கு [illegible] பரிபாலிப்புக்காரனாகிய ச. ஆறுமுகமென்பவர் ஆதீனகர்த்தரால் நியமிக்கப்பட்டுப் பொருள் சேகரிக்கின்றார். சிவநேயர்கள் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

Mis. 34[illegible]. சி. [illegible].

கதிர்காம ஆடித் திருவிழா.

வருடாந்த ஆடித் திருவிழா இவ்வருஷம் ஆடி மீ 14உ அமைந்து ஆடி மீ 28உ முடிவு பெறுமென்பதை இத்தால் அறிவிக்கின்றனே.

2. இத் திருவிழாவுக்குப் போகும் யாத்திரிகருக்கு உத்தரவுச்சீட்டு (திக்கற்) தேவையில்லை.

3 போதிய சாப்பாட்டுச் சாமான்கள் கதிர்காமத்தி லிருக்குமென்பது அசாத்தியம். யாத்திரிகள் தங்கள் சாப்பாட்டுச் சாமான்களைக் கொண்டுபோவது உத்தமம்.

4. 1923 ம் ஆண்டு ஆனி மீ 15-ந் திகதிக் "கெசற்" பத்திரிகையில் வெளிப்படுத்தப்பட்ட விதிகளை யாத்திரிகள் அநுசரிக்கவேணும்.

ஊவாமாகாண அரசாட்சி ஏசன்றர்.

வதுளைக் கச்சேரி,
1923-ம் ஆ ஆனி மீ 20உ.
(G. 308.)

விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் 4926-ம் இலக்க உரிமைத்தத்துவ வழக்கில் 1923 ம் ஞு ஆனி மீ 20-ம் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1923-ஞு ஆடி மீ 7உ சனிக்கிழமை பிற்பகல் 4½மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

விபரம்.

புலோலி மேற்கிலிருந்து காலஞ்சென்று போன ஆறுமுகம் கனகசபையின் ஆதனம்.

1. புலோலி மேற்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிலிருக்கும் "தேவரன் சந்தை" பர, நில இலா. 16 ¾. இதில் பா. கீலே. இலா. 3, குழி 12 ½-ன் நிலத்தில் முப்பத்திரண்டில் ஒன்பது பங்கும், இரண்டு அறையும் நடுவில் சாலையும் உள்ள கல்வீட்டில் வடக்குப்பக்கமாய மூன்றில் இரண்டுபங்கும், முன் போட்டிக்கோவும், கிணற்றில் எட்டில் ஒருபங்கும்.

2. அல்வாய் மணிவீரவாகுதேவன்குறிச்சியிலிருக்கும் "கம்புளிக்கப்பான்" பர. கீலே. இலா; 17 ¾. வெடிதோட்டம் 1. இதற்கூடாகப் போகும் ஒழுங்கைக்கு எடுபட்ட நிலம் நீக்கி மிகுதியில் நாலுற்றுமுப்பத்திரண்டு பங்கில் இருபத்தொரு பங்கும், கூட்டுப்படி கிணற்றிலும், பனைகள் வடலிகளிலும் பன்னிரண்டில் ஐந்து பங்கும்

வ. இராமசுவாமி,
கொம்மிஷனர்,

யாழ்ப்பாணம்
1923-ம் ஆ ஆனி மீ 23உ. (Mis: 348.)

விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் ௪௱௧௫-ம் இலக்க உரிமைத் தத்துவ வழக்கில் ௧௯௨௩-ம் ஆண்டு ஆனி மீ ௪-ந் தேதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் கப்பலை ௧௯௨௩-ம் ஆண்டு ஆடி மாதம் ௨௮-ந்தேதி சனிக்கிழமை முற்பகல் ௧௦ மணி யளவில் யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்.

கல்லூரிலிருந்து காலஞ் சென்றுபோன சங்கரப்பிள்ளை ஆறுமுகமாப்பாணமுதலியாரின் அசைவுள்ள ஆதனம்.

ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலேகட்டப்பட்டிருக்கும் "மயூரவிஜயன்" என்னும் பாய்க் கப்பல். யாழ்ப்பாண ரேகில் ௧௯௧௮-ம் ஆண்டு ௨-ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டது. ௧௫௨ டன் நிறையுள்ளது. (மூவாயிரம் மூடை ஏற்றுமதிசெய்யக் கூடியது.)

(பார்க்க விருப்பமுள்ளவர்கள் ஊர்காவற்றுறைத் துறைமுகத்திற் பார்த்துக் கொள்ளலாம்.)

B Emmanuel,
கொம்மிஷனர்.

யாழ்ப்பாணம்,
௧௯௨௩-ம் ஆ ஆனி மீ ௧௮உ.
(Mis. 346.)

சாராயக்குத்தகை அறிவித்தல்.

இத்தால் அறியத்தருவது என்னவானால்:— இதன்பின்னால் வரும் சாராயக் குத்தகைகளை 1923-ம் ஆண்டு ஒக்ரோபர் மாசம் 1ந்திகதிமுதல் 1924ம் ஆண்டு செப்ரெம்பர்மாசம் 30-ந் தேதி வரையுமாகிய பன்னிரண்டுமாசக் காலத்துக்கும் விலைக்குக் கொள்வனவு பண்ணுவதற்கான கேள்விப்பத்திரங்களைத் திறந்து யோசித்துப் பார்க்கும் நிமித்தமாக மந்திரசபை மண்டபத்திலே இதன்பின்னால் வரும் நாட்களிலே உத்தம தேசாதிபதியவர்களால் நியமிக்கப்பட்டதொரு "போட்" சமாஜம் கூடப்பெறும்:—

1923-ம் ஞு ஜூலை மீ 9ந்திகதி திங்கட்கிழமை.

1. தென்மாகாணம்	காலிடிஸ்திரிக்பிரிவு, மாத்தறை, அம்பாந்தோட்டை டிஸ்திறிக்குகளடக்கமாகவும்.
2. கிழமாகாணம்	மட்டக்களப்பு டிஸ்திறிக் பிரிவு.
3. டிெ	திருக்கோணமலை டிெ
4. வடமேல்மாகாணம்	குருநாக்கல்டிஸ்திறிக் பிரிவு.
5. டிெ	சிலாபடிஸ்திறிக்பிரி.
6. டிெ	புத்தளம் டிெ
7. ஊவாமாகாணம்	வதுளை டிெ

2. சான்கொடுக்க ஆயத்தமாயிருக்கிற விலை இன்னதென்று கேள்விக்காரன் ஒவ்வொருவனும் தொடர்மொழியாயும் இலக்கமாயும் தன்கேள்விப்பத்திரத்திற் சொல்லவேண்டும். ஊவாமாகாணத்துக் கென்றுள்ள தவறணைகளில் விற்பதற்காகக் [illegible] கொண்டுபோகும் ஒவ்வொருகலன் சாராயத்துக்கும் (அந்தச் சாராயம் கள்ளிலிருந்து வடித்தாலுஞ்சரி "மொலாஸ்" சக்கரையிலிருந்து வடித்தாலுஞ்சரி) நீர்வையும் விலையும் புறம்பாக [illegible] கொடுக்க ஆயத்தமாயிருக்கிற கூடியகுத்தகைப் பணம் இன்னதென்று தொடர்மொழியாயும் இலக்கமாயும் தனது கேள்விப்பத்திரத்திற் கேள்விக்காரன் சொல்லவேண்டும்.

3. கேள்விப்பத்திர மெதுவும் அவ்வக் குத்தகைக்கென்று நியமிக்கப்பட்ட தேதி பகல் 12 மணிக்குப் பிறகு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. மேற்காட்டி யிருக்கிறபடியான சகல குத்தகைகளுக்கும் தனித்தனி வெவ்வேறு கேள்விப்பத்திரம் போடவேண்டும். கேள்விப்பத்திரத்திற் குத்தகையினது பெயரும்நம்பரும் ஆகிய இரண்டும் எழுதியிருக்கவேண்டும்.

5. சரியாகச் சீல்முத்திரைவைத்தகேள்விப்பத்திரங்களை, "சாராயக்குத்தகைக் கேள்விப்பத்திரம்" என்று அடையாளமிட்டுக் கௌரவ கலோனியல் சக்கிறத்தார கௌரவ சிசில் கிளமென்றி சி. எம். ஜீ. அவர்களுக்கென்று மேல்விலாசமிட்டு தபால்மார்க்கமாக அநுப்பிவிடலாம். அல்லது கேள்விக்காரன் தானே போட்சமாஜத்தாருக்கு நேரேமுகாமுகமாய்க் கண்டுகொடுக்கினும் கொடுக்கலாம்.

6. சாராயக்குத்தகைகள் கடைசியாக விற்கப்பட்டபின்பு விற்பனவுக் கொந்திசக்கட்டுப்பாடுகள் திருத்திப் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை அரசாட்சியார் "கசற்" 1923-ம் ஞு ஜூன் மீ 15ந்திகதியின் சஞ்சிகையின் 1ம்பகுதி 1288—1289ம் பக்கங்களிற் கண்ட நிபந்தனைகளுக்கமைய மேற்கண்ட (1)தொடக்கம் 6ம் இலக்கமட்டுமுள்ள குத்தகைகள் விற்பனையாகும். ஊவாமாகாணக் குத்தகைக்கு வேறுகொந்திசுக் கட்டுப்பாடுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. 1923ம் ஞு ஜூன் மீ 15ந்திகதியின் அரசாட்சியார் "கசற்" பத்திரிகை பகுதி 1. பக்கம் 1294 தொடக்கம் 1296 மட்டும் பார்க்கவும் விற்பனவுப் புதுக்கொந்திச மாதிரித்தாள்களையும் தவறணைப்புது இடாப்புகளையும் இலங்கையிலுள்ள எந்தக்கச்சேரியிலும் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். ஒருகாரியம் கவனித்துக்கொள்ளவேண்டியது; கொந்திசுக் கட்டுப்பாடுகளின்படி விற்பனவுபண்ணப்படும் சிலாக்கிய உருத்து என்னவாயின் அரக்குச் சாராயம்மாத்திரம் சில்லறையில் விற்கும் உரித்தொன்றே: கள்ளுவிற்கும் உரித்து இதிற் சேர்ந்ததல்ல என்பதாம்.

7. இங்கிலீஷ் பேச இயலாத கேள்விக்காரர்கள் போட் சமாஜத்தோடு பேசிக்கொள்ள விரும்பினால், தங்கள் தங்கள் துவிபாஷகரைக் கூட்டிவரவேண்டும்.

8. சட்டநிருபணசபை மண்டபத்தில் கேள்விக்காரன் நேரே தானேயாவது தனது அதிகாரம்பெற்ற காரியஸ்தர் மூலமாவது, வந்திருந்து தனதுகேள்விப்படி ஒருமாசக் குத்தகைப்பணத்தை உடன்கையிலேகட்டவும் ஆயத்தமாயிருந்தாலன்றி, யாதொருகேள்விப்பத்திர முங் கவனிக்கப்படமாட்டாது. ஊவாமாகாணத்துக்கு ஒருமாசக் குத்தகைப்பணத்துக்குச் சரிவந்ததொகை பிணையாகக் கட்டப்படுதல் வேண்டும்.

கவனிப்பு:—1922ம் ஞு ஒக்ரோபர் முதல் 1923ம் ஞு மார்ச் வரையும் செலவழிந்த சாராயத்தின் சராசரி 1மாசஅளவுப்படி ஊவாமாகாணக் குத்தகைப்பணம் நியமிக்கப்படும்.

9. கேள்விப்பத்திரங்களை யோசித்துப் பார்த்ததன்மேல் போட்சமாஜத்தார் தமது இஷ்டப்படி இரண்டில் ஒன்று செய்யலாம்: (க) அந்தக் குறித்த கேள்விக்காரர்கள் மாத்திரமே விலைவைத்துக் கேட்கிற பிரசித்த ஏலத்தில் உடன்கையிலே தானேபோட்டுக்குத்தகையை விற்பது; அல்லது, (உ) புதுக்கேள்விப்பத்திரங்கள் கேட்டுவாங்குவது. ஒப்பந்தமாய்க் கொடுக்கும்முறைப்படி வதுளை டிஸ்திறிக் குத்தகைப்பகுதியிலுள்ள ஒவ்வொரு தவறணையும் தனித்தனியே விலைக்குக்கொடுப்பதற்கு ஊவாமாகாண அரசாட்சி ஏசன்றருக்குப் போட்சமாஜத்தார் உத்தரவு கொடுக்கினுங் கொடுக்கலாம்.

10. எந்தக் கேள்வியையாவது கேள்விப்பத்திரத்தையாவது ஏற்பதற்கு அல்லது ஏற்காது விடுதற்குப் போட்சமாஜத்தாருக்கு அதிகாரமுண்டு, எவருடைய கேள்வி அல்லது கேள்விப்பத்திரம் ஏற்கப்படுமோ அவரே அத்தச்சலாக்கியத்தைப் பெற்றவராகவெளிப்படுத்தப்படுவர். அவர் அந்தச் சலாக்கியம் விற்கப்பட்ட கொந்திசுக் கட்டுப்பாடுகளுக்கமைந்து நடக்கவேண்டும்.

11. கொன்திரோலர் அவ்வெறவனியூக் கந்தோரில் நேரே முகமுகமாயாவது காகிதம் எழுதியாவது கேட்டு விலையில்லாமல் இனமாகக் கேள்விப்பத்திரமாதிரிகள் பெற்றுக்கொள்ளலாம்.

12. மேலதிகம் ஏதும் சங்கதி அறியவேண்டுமானால். மதுபான பரிபாலனர்க் கம்மிஷனர் துரையை நேரே கண்டு கேட்டாலும் அவருக்குக் காகிதம் எழுதினாலும் அவர் அறிவிப்பார்

கவனிப்பு:—மத்திய வடமாகாணங்களின் சாராயக்குத்தகைகள் அவ் அவ் ஊர்களில் அதாவது: கண்டி, பண்ணாகம், நுவரெலி, யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும், முல்லைத்தீவிலும் விளம்பரஞ்செய்யப்படுந் தேதிகளில் குத்தகைகள் அரசிறை உத்தியோகஸ்தர்களால் விற்கப்படும்.

1923 ம் ஞு ஜூன் மீ 15 திகதியின் அரசாட்சியார் கசற் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்ட குத்தகை விற்றலைப் பற்றிய நிபந்தனைகளில் 25-ம் காண்டத்தைக் கவனமாய்ப்பார்க்கும்படியாக ஊவா மாகாண அரக்குக்குத்தகை கேட்க உத்தேசமாயிருப்போர் கேட்கப்படுகின்றனர்.

உத்தமனுர் கட்டளைப்படி,
சிசில் கிளமென்றி,
கொலோனியல்சக்கிறத்தார்.

கொலோனியல் சக்கிறத்தார் கந்தோர்,
கொழும்பு, 1923ஞு ஜூன் மீ 21உ.
(G. 307.)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—0—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் பஞ்சாட்சரக்குருக்கள் தியாகராசக்குருக்களிடம் அடைவுவைகப்பட்டு இப்போது தவணைதப்பி டிெ சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

நம்.	ஞு மீ	உ	ரு.	ச.	ஊர் பெயர்	நகை விபரம்
	1921ஆ					
207	ஐப்பசி	29	30	02	கோண்டாவில் வ. கந்தையா	சின்னப்பட்டணங்காப்புசோ. 1
309	மார்கழி	2	50	00	கொக்குவில் இ. பொன்னம்பலம்	கிள்ளுகள்
313		3	8	00	வண்-மேற்கு ஆ. கதிரன்	கட்டைவாழி சோடு 2
340		13	10	00	சுன்னுகம் செ. கதிரித்தம்பி	மோதிரம் 1
351		17	8	00	தாவடி க. வேலன்	சறடு 1
361		17	10	00	கோண்டாவில் இ. சின்னப்பு	தரிப்புக்கடுக்கன் சோடு 1
	1922					
449	தை	10	12	00	வண்-மேற்கு க. பொன்னுத்துரை	காட்டுக்கடுக்கன் சோடு 1
527	மாசி	1	10	00	கொக்குவில் நா. மயில்வாகனம்	குவளைக்கடுக்கன் சோடு 1
562		9	25	00	வண்-மேற்கு வே. முருகன்	தாலிக்கொடி 1, குவலைக்கடுக்கன் சோடு 1
616		21	20	00	„ கா. சின்னி	கைச்சங்கிலி 1
625		23	12	00	„ சி. பொன்னப்பா	நீலமோதிரம் 1
715	பங்குனி	26	14	00	„ க. பொன்னுத்துரை	பின்முகப்பு 1
747	சித்.	12	80	00	தாவடி சி. தம்பாபிள்ளை	கெட்டிப்பூரான் சறடு பதக்கம் 1
771		22	10	00	தலையாளி செ. அருணசலம்	நீலவெள்ளைமோதிரம் 1
879	வைகாசி	18	12	00	வண்-மேற்கு வி. சின்னத்துரை	பின்முகப்பு 1
918		25	6	00	வண்-கிழக்கு சி. சனகசபை	மோதிரம் 1
644		31	60	00	கொக்குவில் ஐ. காசிப்பிள்ளை	கம்பிப்பூரான்சறடு 1

விற்பனவு:—1923ஆ ஆனி மீ 23உ (7—7—23) சனிக்கிழமைகாலை 10 மணிக்கு வண்-கிழக்கு பஞ்சாட்சரக்குருக்கள் தியாகராசக்குருக்களின் வீட்டில் எடுபட்டநகை நீக்கிமிகுதி நகைகள் விற்கப்படும்.

(Mis. 348.)

அரு. செல்லையா உடையார்,
வெர்நிஸ்மேஸ்தர்.

அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் பெரி. லெ. ரும. சோமசுந்தரம்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி டிெசட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

நம்.	ஞு மீ	உ	ரு.	ஊர் பெயர்	நகை விபரம்.
	1921ம்ஆ				
1963	டிசம்பர்	8	170	கந்தர்மடம் வி. தாமோதரம்பிள்ளை	பொன் கம்பிப்பூரானட்டியல் 1 திருக்கண்டாமாலை 1
	1922ம்ஆ				
2051	செனவரி	24	140	நயினாதீவு கா. கணபதிப்பிள்ளை	பொன் தொங்கல்சறடு 1
48	பிபர்வரி	25	40	சோனகதெரு சே. முகம்மதுமீறுமெய்தீன்	பொன் அஞ்சுபட்டு பாலைக்கொட்டைமாலை 1
54		27	14	டிெதெரு மு. சுல்த்தானப்துல்காதர்	பொன் மருக்கன்செப்புபதக்கம்1 இமிட்டேஷன் சி. கல் மோதிரம்1
125	எப்ரல்	2	50	கைதடி வே. இளயதம்பி	பொன் கம்பிப்பூரானட்டியல் 1
220	மே	12	135	வண்மேற்கு முத்தையா சுந்தையா	பொன் முறுக்குச்சங்கிலி 1
273	ஜூன்	6	15	நல்லூர் சு. சம்மந்தர்	பொன் க. கொண்டைப்பூ 1
289		10	80	வண் கிழக்கு கா. ராமலிங்கம்	பொன் கெட்டிப்பூரானட்டியல் 1

விற்பனவு:—1923-ம் ஆ ஆனி மீ 16உ (30-6 23) சனிக்கிழமை காலை 10 மணிக்கு எடுபட்ட நகைகள் [illegible] டிெகடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

(Mis. 348.)

அரு. செல்லையா உடையார்,
வெர்நிஸ்மேஸ்தர்,

விளம்பரம்.

தேவை! தேவை!!

நம்பிக்கையான ஒரு வேலைகாரப் பெண் தேவை. கீழ்ச்சொல்லும் விலாசத்திற்கு எழுதவும்.

மிஸிஸ் சந்திரசேகரம்,
குருநாக்கல்.
Mrs. Santherasekaram,
Kurunegala.
(M. 25.)

தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீழம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானுறு.
(H. 16.)

ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

(Standard Tiles.)

இவை வேரூக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாரால் செய்யப்பவேன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டின் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(H. 18.)

காகிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைல் நூலினுல் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:
கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.
(Y. 18.)

புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ வித்துவான். சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டியம், நீலகண்டீயம் சேர்ந்த கட்டு விலை ரூபா 2-00
2. நம்பி அகப்பொருளுரை „ 1-00
3. நவக்கிரக கவசம் விலை அணு 1
4. சனிதுதி „ „ 1
5. தஷகாரியம் „ „ 5
6. இரகுவமிசம் மூலமும் உரையும் (முதற்பாகம்) 1-50

க. செல்லையாஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணர்பண்ணை.
Y. 14.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.